OS:656/2018

Date: 13.12.2024

பெயர் :ராஜா (எ) ராஜ்மோகன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>- 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்

வாதி சண்முகம் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டுதான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி சண்முகத்தின் தந்தை கந்தசாமி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் குழந்தை என்பவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். குழந்தைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஆண்வாரிசுகள் முறையே சின்னபையன், முருகன் என்ற இருவர் உள்ளார்கள் 6 பெண்வாரிசுகள் உள்ளார்கள் அவர்கள் பெயர்கள் தெரியாது. குழந்தை உயிருடன் இருக்கும்போதே அவரது பூர்வீக சொத்துக்களை யாருக்கும் பிரித்து அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி குழந்தை இறந்தபிறகு சின்னபையனும், முருகனும் வாய்மொழியாகவே பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். மேற்படி சின்னபையனும், முருகனும் சட்டப்படி சொத்துக்களை பிரித்து பதிவு செய்துகொண்டார்களா என்றால் இல்லை. ஆனால் தனித்தனியாக பட்டா பெற்றுக்கொண்டார்கள். கந்தசாமி இறந்தபிறகு வாதி சண்முகமும் எனது தாத்தா முருகனின் வாரிசுகளான 2 ம் பிரதிவாதியும், 1 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகள் கூட்டாகத்தான் சுவாதீன அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் எனது தாத்தா முருகனுக்கான பாகத்தை எனது பாட்டிக்கு செட்டில்மெண்ட் செய்துவைத்துள்ளார்.

அது முதல் எனது பாட்டி பெயரில்தான் பட்டா இருந்து வருகிறது. கந்தாய ரசீதுகளும் எனது பாட்டி பெயரில் இருந்து வருகிறது. இன்றுவரை மேற்படி சொத்துக்களானது கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வருகிறது நான் வழக்கிற்காக எனது பாட்டி பெயருக்கு செட்டில்மெண்ட் ஏற்பட்டு பட்டா வழங்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி சண்முகம் அவரது உடன் பிறந்த சகோதரிகளுக்கு திருமணத்தின்போதே போதுமான சீர்வரிசைகள் செய்துள்ளதால் அவர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்பதால் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. வாதியின் தந்தை கந்தசாமிக்கும், 8 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனார் வீரமுத்து, முருகன்

மனைவி அய்யம்மாள் பெயரில் தனித்தனியாக பட்டா இருந்து வருகிறது என்றால் வாதியின் தந்தை கந்தசாமியும், வீரமுத்துவும் வாய்மொழியாகவே பாகப்பிரிவினை செய்துகொண்டதால் அவர்கள் பெயரில் பட்டா வந்துள்ளது. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கந்தாய ரசீதுகளும் அவர்கள் தனித்தனியாக கட்டி வருகிறார்கள். பட்டாவில் உள்ள சர்வே எண்கள் படி பட்டாதாரர்கள் அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அய்யம்மாள் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் வாதி சண்முகம் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, எனது பாட்டி அய்யம்மாள் பெயரில் உள்ள சொத்தில் முழு அனுபவத்திலும் நான் தான் இருந்து வருகிறேன். கந்தசாமி பெயரில் உள்ள பட்டா நிலத்தில் ஒரு சில சர்வே எண்களில் வீரமுத்துவின் வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாய்மொழியாக பிரிந்ததாக நான் சொல்கிறேன் எனது எதிர் வழக்குரையிலோ எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ யார் முன்னிலையில் அவ்வாறு பிரிக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, பெரியோர்கள் அப்போது பிரித்துகொண்டார்கள்.

பெரியவர்கள் என்றால் யாரை குறிப்பிடுகிறேன் என்றால் ஊர் பெரியோர்கள் முன்னின்று செய்தார்கள். நான் சொல்வதுபோல் குழந்தையின் ஆண்வாரிசுகள் சின்னபையன், முருகனுக்கு இடையே எந்த வித பாகப்பிரிவினையும் முறையாக பதிவு செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வாதியின் தந்தைக்கு பிரிந்த பாகத்தை வாதியின் தந்தையே சொத்தின் ஒரு பகுதியை 2005 ஆண்டு பழனிவேல் என்பவருக்கு சர்வே எண்.37/13 என்ற எண்ணில் உள்ள 5 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளார். அந்த விவரத்தை நான் எனது எதிர் வழக்குரையிலும், முதல் விசரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். குழந்தை, சின்னபையன் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான கந்தசாமி, வீரமுத்து, முருகன் ஆகியோர்கள் இதுவரை முறையாக பாகப்பிரிவினை எழுதி பிரித்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா சொத்துக்கள் இதுவரை கூட்டு குடும்ப முழு சொத்துக்களாகத்தான் இருந்துவருகிறது என்று சொன்னால் சரியல்ல, தனித்தனியாகத்தான் பட்டா உள்ளது. அவரவர் வீடு கட்டி வரி ரசீதுகள் கட்டி தனித்தனியாக உள்ளது. வாதிக்கும், 1 ம் பிரதிவாதி வீரமுத்துவிற்கும், அவரது வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கும், எனது தகப்பனாருக்கும் இன்றுவரை சொத்துக்கள் சம்மந்தமாக கருத்துவேறுபாடுகள் இருந்து

வருகிறது என்றால் சரியல்ல. பொய்யான வழக்கினை வாதி போட்டுள்ளார். சர்வே எண்.37/3 ல் 2 ம் பிரதிவாதி கோவிந்தன் வீடு கட்டியபோது 2010 ம் ஆண்டு வாதி சண்முகம் தடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, எனது தந்தை வழக்கு போடுவதற்கு முன்பாகவே தாவா இடத்தில் வீடு கட்டியுள்ளார். வாதி ஆட்சேபனை செய்தபோதும் அந்த இடத்தில் நாங்கள் வீடு கட்டியுள்ளோம் என்று சொன்னால் எங்களுக்கு பிரிந்த இடத்தில்தான் வீடு கட்டினோம். ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் நாங்கள் மற்றும் வாதி மற்ற பிரதிவாதிகள் அனைவரும் பாகம் பிரித்துகொள்வது பற்றி பஞ்சாயத்து பேசப்பட்டது என்று சொன்னால் இல்லை. மேற்படி பஞ்சாயத்தில் எனது தந்தை உடன்படவில்லை என்று சொன்னதால் தான் வாதி சண்முகம் இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சின்னபையனும், முருகனும் கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பே பாகம் பரித்துகொண்டதாக சொல்வது உண்மையில்லை பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையே சின்னபையனுக்கு 1 ஏக்கர் 42 ½ செண்ட் ஒதுக்கப்பட்டது என சொல்வது தவறானது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

குடும்ப பெரியோர்கள் அவரவர்கள் திருமணத்திற்கு பின்னிட்டு ஒரு குடும்ப ஜீவனத்திற்காக சொத்துக்களை முறையாக பிரித்துகொள்ளாமல் ஓட்டிவந்தார்கள் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் முருகனுக்கு 30 செண்ட் நிலம் குறைவாக ஒதுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அதற்கு காரணம் வாதியின் தாத்தாவிற்கு பிரிந்த நிலம் நல்ல மண்வளமான பூமி எனது தாத்தாவிற்கு பிரிந்த பாகம் மண் வளம் குறைவான கற்களும், கரடுகளும் உள்ள பூமி ஆகும். அதனால் தான் 8 முதல் 12 பிரதிவாதிகள் முறையாக தாவா சொத்துக்களை பாகம் பிரிக்கப்படவில்லை என சொல்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்